CASE NO : CP 2/2024

NAME : PW1 – R. மயில்சாமி

DATE : 05.08.2025

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை

எதிர்மனுதாரர் நிறுவன சங்க துணை விதிகளின் படி நான் தலைமை நிர்வாக அதிகாரி என்றால் சரிதான். எங்களின் பணியாளர்களுக்கு சம்பளம் குறித்த கணக்கு விவர பதிவேடுகளை நான் தயார் செய்து தலைவர் அல்லது தனி அலுவலருக்கு அனுப்புவேன். எதிர்மனுதாரர் சங்க வங்கி கணக்கு விவரங்களையும் நான் தான் பராமரித்து வந்தேன் என்றால், நானும் என்னுடன் சேர்ந்து தலைவரோ அல்லது தனி அலுவலரோ பார்த்து வந்தோம். எனக்கு cheque issue செய்யும் அதிகாரம் இருந்தது என்றால் சரிதான். சங்க எல்லைக்குட்பட்ட உறுப்பினர்களுக்கு பயிர் கடன், நகை கடன் உள்ளிட்ட அனைத்து கடன்களும் வழங்கும் அதிகாரம் எனக்கு உள்ளதா என்றால் சம்பந்ததப்பட்ட உறுப்பினர்களிடம் இருந்து விண்ணப்பங்களை பெற்று மத்திய கூட்டுறவு வங்கிக்கு எனது பரிந்துரையின் அடிப்படையில் மேற்படி வங்கி அதிகாரி பரிசீலனை செய்து வழங்குவார். எனது அதிகாரத்தின் கீழ்

செயலாளர், உதவி செயலாளர், எழுத்தர் மற்றும் இரண்டு நியாயவிலை கடைகள் செயல்பட்டு வந்தன என்றால் சரிதான். எதிர்மனுதாரர் சங்க துணைவிதிகளின் படி நான் தான் நிர்வாக அதிகாரி அதனால் தொழிலாளர் நீதிமன்றத்தில் என்னுடைய பரிகாரத்தை கோர முடியாது என்றால் சரியல்ல. 31.01.2019 தேதியில் என்னுடைய உயர் அதிகாரிகளான DR and JRன் அனுமதி பெற்று நான் பணி ஓய்வு பெறவில்லை என்றால் சரியல்ல. Board of Directors மற்றும் தலைவர் ஆகியோர்கள் தான் என்னை relive செய்தார்கள். என்னுடைய பணி காலத்தில் பயிர் சம்பந்தப்பட்ட அனைத்து கடன் வழங்குவதில் நிறைய முறைகேடுகள் நடைபெற்று, அதனால் எதிர்மனுதாரர் சங்கத்திற்கு பெரும் நிதி சுமை ஏற்பட்டது என்றால் சரியல்ல. தேவைக்கதிகமான பணியாளர்களை அமர்த்தி சங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு தேவையான சம்பள உயர்வு உட்பட பல்வேறு எனக்கு சாதகமான தீர்மானங்களை நானே type செய்து எனக்கு சாதகமான நிர்வாக தலைவரிடம் கையெழுத்து பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பணி ஓய்வு பெறும் போது எதிர்மனுதாரர் சங்கத்திற்கு சுமார் 1 1/2 கோடி நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளேன் என்றால்

சரியல்ல. எதிர்மனுதாரர் சங்கத்திற்கு ஏற்பட்ட நிதியிழப்புக்கு நான் மட்டும் பொறுப்பல்ல, அனைத்து பணியாளர்களும் அரசு தள்ளுபடி சலுகைகளுமே காரணமாகும். என்னுடைய பணிகாலத்தில் நிதியாதரங்களை ஏற்படுத்தாமல் உறுப்பினர்களின் சேமிப்பை எடுத்து ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கினேன் என்றால் சரியல்ல. நான் பணிபுரிந்த போது முறையாக income tax returns சரியாக தாக்கல் செய்யாததால் எதிர்மனுதாரர் சங்கத்திற்கான வங்கி கணக்குகள் 3ம் வரிமான வரித்துறையினரால் முடக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சரியாக தான் வருமான வரிக்கணக்கு தாக்கல் செய்தேன்.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.